**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பணத்தை வசூல் செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இதற்கு முன்னர் இதேபோல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் உயர்நீதிமன்றத்தில் நீதி பேராணை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு என்ன ஆனது என்றால் அந்த வழக்கு திரும்ப பெற்றுக் கொண்டதன் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கின் எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 7 ஆண்டுகளுக்கு முன் தாக்கல் செய்யப்பட்டது. உயர்நீதிமன்ற நீதி பேராணை வழக்கு பற்றி நான் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வழக்குரையில் எந்த பத்தியில் அதனை நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 16வது பத்தியில் குறிப்பிட்டுள்ளேன். நீதி பேராணைக்கு முன்பு வேறு எதுவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வங்கி ஆம்பட்ஸ்மேனில் நான் மனு கொடுத்தேன். ஆம்பட்ஸ்மேன் மன்றத்தில் எனக்கு சாதகமாக உத்தரவு வராததால் அதனை மேல்முறையீடு செய்தேன். அந்த மேல்முறையீட்டில் நீதிமன்றத்தில் தீர்வு கண்டுக்கொள்ளும்படி கூறிவிட்டார்கள். நீதி பேராணை மனுவை நான் ஏன் வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் தனியார் வங்கிக்கு எதிராக நீதி பேராணை மனு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னதால் என் வழக்கறிஞர் அதனை திரும்ப பெற்றுக்கொண்டார். என் சம்மதம் இல்லாமல் அவ்வாறு திரும்ப பெற்றார். என் வழக்கறிஞர் என் அனுமதியின்றி மனுவை திரும்ப பெற்றது குறித்து அவர் மீது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வங்கி ஆம்பட்ஸ்மேனில் நான் கொடுத்த மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வங்கி ஆம்பட்ஸ்மேனில் முதலில் கொடுத்த மனு வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளேன். அத்துடன் ரங்கநாதனின் இறப்பு சான்றிதழும் சேர்த்து கொடுத்தேனா என்றால் இல்லை. அது தவறாக சேர்க்கப்பட்டுள்ளது. வங்கி ஆம்பட்ஸ்மேனில் மேல்முறையீடு செய்த மனுவை வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த உத்தரவை வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்துள்ளேன். வங்கி ஆம்பட்ஸ்மேனில் கொடுத்த மனு, மேல்முறையீடு மனு மற்றும் உத்தரவை தாக்கல் செய்துள்ள நிலையில் நீதிபேராணை மனுவின் நகலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிபேராணையில் ஆஜரான வழக்கறிஞர் மெய்யப்பன் அவர்கள் அந்த நகலை எனக்கு கொடுக்கவில்லை, எனவே தாக்கல் செய்யவில்லை. ரங்கநாதன் உடன்

பிறந்தவர்கள் யார், யார் என்றால் 3 ஆண்கள், 2 பெண்கள் ஆவர். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை. ரங்கநாதன் வங்கி கணக்கை எப்பொழுது துவங்கினார் என்றால் நினைவில்லை. வழக்குரையிலும் சொல்லவில்லை. காசோலை புத்தகத்தை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன். சாட்சியிடம் தற்போது ஆவணங்களை காட்டி அதில் எது காசோலை புத்தகம் என்று கேட்டபோது அவரால் குறிப்பிட்டு காண்பிக்க இயலவில்லை. ஆனால் நீதிமன்றத்தில் கொடுத்ததாக கூறுகிறார். நான் குறிப்பிடும் காசோலையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது சாட்சி தான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அது இல்லை என்று கூறுகிறார். வங்கி அப்ளிக்கேஷன் பாமில் நான் சொல்ல, சொல்ல ரங்கநாதன் பூர்த்தி செய்தார். அதனால் நான் தான் அவருக்கு நாமினியாக உள்ளேன் என்று எனக்கு தெரியும். ரங்கநாதன் இறப்பதற்கு கடைசி ஒரு மாத காலத்திற்கு முன்பு அப்துல் அஜிஸ் தெரு, தியாகராயநகரில் ஒரு வாடகை வீட்டில் இருந்தார். ரங்கநாதன் என்ன நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் நுரையீரல் பாதிக்கப்பட்டிருந்தார். ரங்கநாதனை யார் பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் நான் ஏற்பாடு செய்த பெயர் தெரியாத கேன்டேக்கர் அவரை கவனித்துக்கொண்டிருந்தார். அவர் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு அவர் எங்கிருந்தார் என்றால் விஜயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை மருத்துவமனையில் இருந்து விடுவித்து அவரை கவனிப்பதற்கு ஒரு ஆளை நியமித்தேன். 15 நாட்கள் கழித்து அவர் இறந்துவிட்டார். அவரை மருத்துவமனையில் இருந்து விடுவிக்கும்போது 40 சதவீதம் மட்டுமே நுரையீரல் வேலை செய்வதாகவும், மீண்டும் அவருக்கு மூச்சு இரைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் அவரை காப்பாற்ற இயலாது என்று சொன்னார்கள். அவர் சிட்டியூனியன் வங்கியில் இருந்த கணக்கை ஈக்குவட்டார்ஸ் சமால் பைனான்ஸ் என்ற வங்கிக்கு வட்டி விகிதம் கூடுதலாக இருந்ததால் மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு மாற்றினார். மருத்துவமனையில் இருந்து வந்து ஒரு வார காலத்திற்குள் ஈக்குவட்டார்ஸ் சமால் பைனான்ஸ் அலுவலர்களை வீட்டிற்கு வரவழைத்தார். அவ்வாறு வங்கி அலுவலர்கள் வந்தபோது வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் அவரை கவனித்து வந்த நபர் மட்டும் இருந்தார். அலுவலர்கள் வந்ததாக அந்த நபர் எனக்கு தொலைபேசியில் சொன்னார். அந்த வங்கி அலுவலர்கள் வந்துவிட்டு போன பிறகு சொன்னாரா

என்றால் அவர்கள் இருக்கும்போதே சொன்னார். அப்பொழுது நான், ரங்கநாதனிடம் போனில் பேசினேனா என்றால் ரங்கநாதன் தான் எனக்கு போனில் பேசினார். என்னுடன் பிறந்தவர்கள் 3 பேர். ரங்கநாதன் இறக்கும் போது அவருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் உயிருடன் இருந்தார்கள் என்றால் ஒருவர் இருந்தார், அவர் அவரது அக்கா ஆவார். ரங்கநாதனின் மற்ற சகோதர, சகோதரிகளுக்கு வாரிசுகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். ரங்கநாதனுக்கு வேறு ஏதாவது சொத்து இருந்ததா என்றால் சொத்து இருந்தது, அதனை விற்று தான் வங்கியில் பணம் போட்டார். மேற்படி பணத்தை தவிர ரங்கநாதனுக்கு வேறு எந்த சொத்தும் இல்லை. ரங்கநாதன் எழுதிய 2 புத்தகங்கள் சுமார் 500 பதிப்புகள் என்னிடம் உள்ளது. ரங்கநாதனின் வாரிசு சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. ரங்கநாதன் இறந்த போது யார உயிருடன் இருந்தார்கள் என்றால் ரங்கநாதனின் முதல் அக்கா மற்றும் இறந்துபோன அக்காவின் மகன், இறந்துபோன மூத்த அண்ணனின் வாரிசுகள் 4 பேர்கள் (3 பெண்கள், ஒரு ஆண்). இறந்துபோன 2வது அண்ணனின் வாரிசுகள் 3 ஆண்கள், இறந்துபோன 3வது அண்ணனுக்கு வாரிசுகள் யாருமில்லை. வங்கி கணக்கு துவங்குவதற்கான அப்ளிகேஷன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னை நாமினியாக எதில் போட்டுள்ளார் என்றால் வங்கி கணக்கு துவங்குவதற்கான அப்ளிகேஷனில் போட்டுள்ளதாக அவர் சொன்னார். நான் போனில் சொல்ல, சொல்ல பெயர், முகவரி, பிறந்த நாள் அனைத்தையும் நாமினி என்ற இடத்தில் ரங்கநாதன் எழுதினார். ரங்கநாதன் இறந்து எத்தனை நாட்கள் கழித்து நான் வங்கியை அனுகினேன் என்றால் ஒரு மாதம் கழித்து அனுகினேன். ஆதார் கார்டு, வீட்டு வரி ரசீது, ரங்கநாதனின் இறப்பு சான்றிதழ், தகன சான்று ஆகியவற்றுடன் வங்கியில் அனுகினேன். Smooth transaction-க்காக அந்த வங்கியில் ஒரு கணக்கு துவங்க சொன்னார்கள். அந்த கணக்கு துவங்கியது சம்பந்தமாக ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அதன் பின்னர் வங்கி லீகல் டீம்மை சந்திக்க சொன்னார்கள்.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)